திரு. மி. வின்சென்ட் : நான் இன்னும் 2 மாதங்களில் திருமணம் செய்துகொள்ளப் போகிறேன்.

(இ) ஒத்திவைக்கப்பட்ட மருத்துவத்துறை சம்பந்தப்பட்ட வினாக்களை எடுத்துக்கொள்வது குறித்து.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, மருத்துவத் துறை சம்பந்தப்பட்ட கேள்விகள் 11-ஆம் தேதி இந்த அவையில் ஒத்திவைக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறையிலே வந்து கேளுங்கள்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : 11-ஆம் தேதி ஒத்திவைக்கப் பட்ட மருத்துவத்துறை சம்பந்தப்பட்ட கேள்விகள் என்னுடைய தொகுதியைப் பற்றிய கேள்விகள், அமைச்சர் அவர்கள் இல்லாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டது. இப்போது இந்தக் கூட்டத் தொடரும் முடிய இருக்கிற காரணத்தினால் இந்தக் கூட்டத்தொடர் முடிவதற்குள் அதற்கு விடையளிக்க தாங்கள் ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலமைச்சர் அவர்கள் அவையில் இல்லை. அவர்கள் வந்த உடன் கேட்டுப் பதில் சொல்லுகிறேன்.

(ஈ) திருத்துறைப்பூண்டி அரிசன நலப் பள்ளியில் மாணவர் களுக்குத் தரப்பட்ட சாப்பாட்டுத் தட்டுகள் பற்றி எழுப்பப் பட்ட பிரச்சினை உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட்டிருக்கும் போது மேலதிகாரிகள் அப்பள்ளி ஆசிரியர்களை அச்சுறுத்துவதாக கூறப்படுவது குறித்து.

திரு. மா. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, நேற்றைய தினம் சட்டமன்றத்தில் திருத்துறைப்பூண்டி அரிசன நலப் பள்ளியில் மாணவர்களுக்குச் சாப்பாட்டுத் தட்டுகள் வழங்கியிருப் பதையும், அதில் எம். ஜி. ஆர். லதா என்று பெயர்கள் பொறிக்கப்பட்டு இருப்பதையும் குறிப்பிட்டு இங்கே தெரிவிக்கப் பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயிண்ட் ஆப் ஆர்டர் எதற்காக என்ற விவரத்திற்கு வாருங்கள்.

திரு. மா. மீனாட்சிசுந்தரம் : அந்த சம்பவத்தின் விளைவாக நேற்று மாவட்டத்தின் பெரிய அதிகாரிகள் அந்த திருத்துறைப் பூண்டி ஆசிரியர்களை அழைத்து இந்த மாதிரி தட்டுகள் அங்கே வழங்கப்படவில்லை, அந்தத் தட்டுகளைத் திரும்பத்தாருங்கள்

என்று பயமுறுத்திக் கொண்டு இருப்பதாகத் தகவல் எனக்கு வந்து இருக்கிறது. அதைப் பற்றி உரிமைக் குழுவிற்கு அனுப்பி விட்ட பிறகு இப்படிப்பட்ட சம்பவம் நடப்பது சரியா, சபா நாயகர் இதில் தலையிட்டு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி விவரமாக எனக்கு மாண்புமிகு உறுப்பினர் எழுத்து மூலமாகத் தருவார் களானால் நான் அதைப்பற்றி விசாரிக்கிறேன்.

3. (அ) சட்டமன்றக் கட்சி அலுவலகத்தில் அரசியல் கட்சி களின் கூட்டத்தைக் கூட்டுவது குறித்து—தொடர்ச்சி.

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, சட்டமன்ற கட்சி அலுவலகத்திலே கட்சிப் பொதுக்கூட்டம் நடத்துவது சரிதானா என்ற அளவிற்கு விதி இல்லை என்று சொன்னீர்கள். ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் சாதாரண சூழ்நிலையில் அப்படி நடப்பதால் கவலை இல்லை. தேர்தல் காலத்தில் அப்படிப்பட்ட கூட்டம் நடைபெற்றால் அது வேறு மாதிரி பிரச்னைகளை உருவாக்கும். ஆகவே, அதை முடிவு கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்களுக்கும், அவைக்கும் அதுகுறித்து விளக்கமாகச் சொன்னேன். நீங்கள் எனக்கு விதிகளை உருவாக்கித் தாருங்கள். நான் அதைக் கடைபிடிக்கிறேன். அது இந்த அவையில் இருக்கும் உறுப்பினர் களின் உரிமை. நீங்கள் முடிவு எடுக்கவேண்டியது குறித்து என்னிடத்தில் சொன்னால் நான் என்ன செய்வது ?

2. (ஆ) திருமணமாகாத உறுப்பினர்கள் அரசால் அறிவிக்கப் பட்ட ரயில் பிரயாண சலுகையை எப்படி பயன்படுத்துவது என்பது குறித்து—தொடர்ச்சி.

திரு. செ. கிருஷ்ணன் : தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் துணைவியரோடு தொகுதிப்பணி செய்ய ரயிலில் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டு இருக்கிறது. எங்கள் கன்னியாகுமரி பகுதியில் ரயில் கிடையாது. நாங்கள் தொகுதியில் பயணம் செய்யவேண்டுமானால், துணைவியரோடு பேருந்து களில் தான் பயணம் செய்யவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்காகத்தான் ரயில் போகாத இடங்களில் பயணம் செய்யப் பேருந்து பாஸ் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு ரயில் நிலையம் வரையில் வந்துவிட்டு, அங்கிருந்து பிறகு ரயிலில் பயணம் செய்யலாம்.